ஸියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I
**தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I**
Communication and Media Studies I

**29 T I**

පැය දෙකයි
***இரண்டு மணித்தியாலம்***
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** கண்ணுடனும் காதுடனும் தொடர்புபடும் தொடர்பாடலின் அடிப்படைக் கூறு
(1) பெறுநர் ஆகும். (2) குறிமுறையாக்கம் ஆகும். (3) ஊடகம் ஆகும்.
(4) தொடர்பாடுநர் ஆகும். (5) குறிமுறையவிழ்ப்பு ஆகும்.

**2.** உலகளவில் தொடர்பாடல் கற்கையை ஓர் கல்விப்புலம்சார் பாடமாக முதன்முதலில் ஆரம்பித்த பல்கலைக்கழகம்
(1) ஒக்ஸ்போர்ட் ஆகும். (2) இலினோயிஸ் ஆகும்.
(3) கேம்பிரிட்ஜ் ஆகும். (4) ஹவார்ட் ஆகும்.
(5) சோர்போன் ஆகும்.

**3.** இலங்கையில் செய்திப்பத்திரிகைகள் வரலாற்றில் ஓர் மைல்கல்லான 'லங்காலோஹய' ஆரம்பிக்கப்பட்டது
(1) 1802 இல் ஆகும். (2) 1834 இல் ஆகும்.
(3) 1860 இல் ஆகும். (4) 1862 இல் ஆகும்.
(5) 1866 இல் ஆகும்.

**4.** பின்வருவனவற்றுள் கருவி துணையுடனான ஆளிடைத் தொடர்பாடலுடன் தொடர்புபட்டது எது?
(1) வானொலி (2) ஒலிபெருக்கி (3) தொலைக்காட்சி
(4) தொலைபேசி (5) எறிவை

**5.** தொடர்பாடல் மாதிரிகளில், தொடர்பாடல் ஓர் தொடர்ச்சியான செயன்முறை என்பதை விளக்கியவர் யார்?
(1) ஹரோல்ட் டீ. லாஸ்வெல்
(2) அரிஸ்டோட்டில்
(3) வொரன் வீவர்
(4) குளொட் ஷனொன் மற்றும் வொரன் வீவர்
(5) வில்பர் ஷ்ராம் மற்றும் சார்ள்ஸ் ஒஸ்குட்

**6.** குரலொலி, இசை, மௌனத்தைப் படைப்பாக்கத்துடன் பயன்படுத்தும் பிரதான ஊடகம்
(1) சினிமா ஆகும். (2) தொலைக்காட்சி ஆகும்.
(3) வானொலி ஆகும். (4) சமூக ஊடகங்கள் ஆகும்.
(5) ஒலி - காட்சி ஊடகம் ஆகும்.

**7.** ஊடகக் கொள்கைகளைத் தயாரிக்கும்போது, மிக முக்கியமான கூறாக அமைவது
(1) நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பு ஆகும்.
(2) அரசியலமைப்பு ஆகும்.
(3) வெகுசன ஊடக அமைச்சு ஆகும்.
(4) சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் ஆகும்.
(5) ஊடக உரிமையாண்மை ஆகும்.

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki

**8.** உள்ளடக்கத்தை உருவாக்குவதற்கு, பெறுநர் செயற்திறனுடன் பங்களிக்கும் ஊடகக் களத்தைத் தெரிவுசெய்க.
(1) அச்சு ஊடகம்
(2) திரைப்பட ஊடகம்
(3) வானொலி ஊடகம்
(4) தொலைக்காட்சி ஊடகம்
(5) சமூக ஊடகம்

**9.** தொடர்பாடல் செயன்முறையின் முக்கிய கூறுகளை மாத்திரம் **உள்ளடக்காத** தெரிவு பின்வருவனவற்றுள் எது?
(1) ஊடகம், வடிகட்டிகள், சூழல்
(2) தொடர்பாடுநர், சூழல், இரைச்சல்
(3) தாக்கம், அனுபவக் களம், ஊடகம்
(4) சூழல், குறிமுறையாக்கம், பின்னூட்டம்
(5) குறிமுறையாக்கம், செய்தி, அனுபவக் களம்

**10.** செய்தியொன்றில், படைப்பாக்க மொழியின் பயன்பாட்டிற்கு அதிக வாய்ப்புக் காணக்கிடைப்பது
(1) முதற் பந்தியில் ஆகும்.
(2) தலைப்பில் ஆகும்.
(3) மூலங்களைக் குறிப்பிடும்போது ஆகும்.
(4) சம்பவத்தை விபரிக்கும்போது ஆகும்.
(5) இறுதிப் பந்தியில் ஆகும்.

**11.** தொடர்பாடல் மாதிரியொன்றில் தகவல் மூலம் பற்றிக் குறிப்பிட்டவர் யார்?
(1) வில்பர் ஷ்ராம்
(2) அரிஸ்டோட்டில்
(3) ஹரோல்ட் டீ. லாஸ்வெல்
(4) ஒஸ்குட் மற்றும் ஷ்ராம்
(5) ஷினொன் மற்றும் வீவர்

**12.** பயன்படுத்துபவருக்குத் தோழமையாயிருத்தல், நம்பிக்கை, கண்ணியம், பொதுவான ஏற்புடமை, பொதுசன நல்லெண்ணம் காணக்கிடைக்கக் கூடியதாயிருப்பது
(1) வெகுசனத் தொடர்பாடலில் ஆகும்.
(2) சமூக ஊடகத் தொடர்பாடலில் ஆகும்.
(3) முறைசார் தொடர்பாடலில் ஆகும்.
(4) பொதுசனத் தொடர்பாடலில் ஆகும்.
(5) பாரம்பரியத் தொடர்பாடலில் ஆகும்.

**13.** மாற்றமடையும் சமூக பண்பாட்டு நிலவரங்களுக்கு ஏற்பப் பொருந்திப்போதல் என்பது
(1) விளங்கறிவு என அர்த்தப்படுகின்றது.
(2) சமூகமயமாதல் என அர்த்தப்படுகின்றது.
(3) கண்காணிப்பு என அர்த்தப்படுகின்றது.
(4) வெகுசனப் பண்பாடு என அர்த்தப்படுகின்றது.
(5) திசைதிரும்புதல் என அர்த்தப்படுகின்றது.

**14.** ஊடக இடையூறு அடிப்படையில் ஏற்படுவது
(1) பெறுநரின் குறைபாடுகளால் ஆகும்.
(2) சூழல்சார் குறைபாடுகளால் ஆகும்.
(3) சமிக்ஞைகளின் குறைபாடுகளால் ஆகும்.
(4) கேட்டலின் குறைபாடுகளால் ஆகும்.
(5) தொடர்பாடுநரின் குறைபாடுகளால் ஆகும்.

**15.** செய்திப்பத்திரிகையொன்றின் நிலைநோக்கு வெளிப்படுத்தப்படுவது, அதன்
(1) விளம்பரங்களால் ஆகும்.
(2) செய்திகளால் ஆகும்.
(3) பத்தியெழுத்துக்களால் ஆகும்.
(4) விவரணக் கட்டுரைகளால் ஆகும்.
(5) ஆசிரியர் தலையங்கத்தால் ஆகும்.

[பக். 3 ஐப் பார்க்க

**16.** ஓர் பெரும் பெறுநர் தொகுதி ஒப்பீட்டுரீதியாகச் சிறு இலக்குக் குழுக்களாகப் பிரிக்கப்படுவது
(1) ஊடகக் குவிகை ஆகும்.
(2) சிறுகூறுகளாக்குதல் ஆகும்.
(3) கட்டுப்பாட்டுத் தளர்வு ஆகும்.
(4) நுகர்வுமயம் ஆகும்.
(5) சுயநிர்ணயம் ஆகும்.

**17.** செலுத்தி ஓர் முக்கிய கூறாக உள்ளடக்கப்பட்டது
(1) அரிஸ்டோட்டில் மாதிரியில் ஆகும்.
(2) லாஸ்வெல் மாதிரியில் ஆகும்.
(3) ஷினொன் - வீவர் மாதிரியில் ஆகும்.
(4) ஷ்ராம் - ஒஸ்குட் மாதிரியில் ஆகும்.
(5) HUB மாதிரியில் ஆகும்.

**18.** வறுமைக்கான ஓர் தீர்வாக, முதலாளித்துவ விழுமியங்களை நீட்சிபெறச் செய்வதும் சமவுடமைப் பரவலை இழிவளவாக்குவதும் பிரேரிக்கப்பட்டது
(1) நவீனமயமாக்கற் கோட்பாட்டில் ஆகும்.
(2) தங்குநிலைக் கோட்பாட்டில் ஆகும்.
(3) யுனெஸ்கோவினால் ஆகும்.
(4) டட்லி சியர்ஸினால் ஆகும்.
(5) எவரெட் எம். ரோஜர்ஸினால் ஆகும்.

**19.** "கண்ணுக்குப் புலப்படாத பெறுநர்கள் குறிப்பிட்டதொரு ஊடகமொன்றின் வழியாக எதிர்கொள்ளப்படும்போது, அது வெகுசன ஊடகமென அடையாளப்படுத்தப்படும்". இந்த வரைவிலக்கணம் காணக்கிடைப்பது
(1) சுமங்கல அகராதியில் ஆகும்.
(2) HUB மாதிரியில் ஆகும்.
(3) மக் ப்ரைட் அறிக்கையில் ஆகும்.
(4) ஒக்ஸ்போர்ட் அகராதியில் ஆகும்.
(5) எட்வேர்ட் சப்பியரின் வரைவிலக்கணத்தில் ஆகும்.

**20.** அபிவிருத்தித் தொடர்பாடலில், தொடர்பாடலுக்கும் சமூகக் கட்டமைப்பிற்கும் இடையிலான இணைப்பை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டியவர் யார்?
(1) ஸ்ரீநிவாஸ் மெல்கோட்டே
(2) சில்வியா வைஸ்போட்
(3) டட்லி சியர்ஸ்
(4) எட்கர் ஓவன்ஸ்
(5) எவரெட் எம். ரோஜர்ஸ்

**21.** வரலாற்று அறிவை ஞாபகப்படுத்திக் கொள்ளவும், பேணிப் பாதுகாக்கவும் பண்டைய அறிஞர்களால் பயன்படுத்தப்பட்ட தொடர்பாடல் தந்திரோபாயம்
(1) சாராம்சப்படுத்துதல் ஆகும்.
(2) குழுவாக்கல் ஆகும்.
(3) படைப்பாக்கம் ஆகும்.
(4) வரைதல் ஆகும்.
(5) தொகுப்பாக்குதல் ஆகும்.

PAST PAPERS WIKI

**22.** 'தேசிய அபிவிருத்தி' என்பது யாதெனப் புரிந்துகொள்ளப்படுவது
(1) வறுமை, சமமின்மை, வேலைவாய்ப்பின்மையைக் குறைத்தல் என்ற அடிப்படையில் ஆகும்.
(2) சமூக, பண்பாட்டு, ஒழுக்க மற்றும் பொருளாதார விருத்தி என்ற அடிப்படையில் ஆகும்.
(3) உள, ஆன்மீக, பொருள் தேவைகளைத் திருப்திப்படுத்துதல் என்ற அடிப்படையில் ஆகும்.
(4) மேற்கத்தேய அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மேலிருந்து கீழ் அதிகாரப் படிநிலை எண்ணக்கருவைச் செயற்படுத்துதல் என்ற அடிப்படையில் ஆகும்.
(5) தலாவீத வருமானம், தேசிய வருமானம் மற்றும் பொருளாதார நலன்புரிதல் ஆகியவற்றின் நேர்மறையான வளர்ச்சி என்ற அடிப்படையில் ஆகும்.

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



**23.** பின்வருவன ஊடக ஒழுங்குபடுத்தல் (தணிக்கை) பற்றிய சில அம்சங்களாகும்.

*A* - கல்விசார் ஆய்வாளர்கள் பங்கெடுத்தல்
*B* - சட்டரீதியாக ஸ்தாபிக்கப்படுவது
*C* - அரசியல் செல்வாக்கிற்கு ஆட்படக்கூடிய வாய்ப்பு

இந்த அம்சங்களுடன் தொடர்புடைய ஒழுங்குபடுத்தல் அணுகுமுறை

(1) சுய தணிக்கை ஆகும்.
(2) சட்டரீதியான தணிக்கை ஆகும்.
(3) கூட்டுத் தணிக்கை ஆகும்.
(4) கட்டுப்பாட்டுத் தளர்வு ஆகும்.
(5) நிறுவனரீதியான தணிக்கை ஆகும்.

**24.** மனித மூளையில் இடம்பெறும் அமைப்பொழுங்குடனான தகவற்சேமிப்பு

(1) அறிவுக் கட்டமைப்பு என அழைக்கப்படும்.
(2) தனிப்பட்ட அவதானம் என அழைக்கப்படும்.
(3) ஊடக விளங்கறிவு என அழைக்கப்படும்.
(4) உணர்வுரீதியான பரிமாணம் என அழைக்கப்படும்.
(5) தொடர்பாடற் திறன்கள் என அழைக்கப்படும்.

**25.** தினக்குறிப்பேட்டை ஒத்ததாக, ஊடக அனுபவங்களுடன் தனது புகைப்படங்களை டிஜிட்டல் வெளியில் சேமித்துக் கொள்வதற்கு நிமலன் தீர்மானித்தார். இந்தத் தேவைக்கு மிகவும் பொருத்தமான வடிவம் எது?

(1) இணையத்தளம் (Website)
(2) பொட்காஸ்ட் (Podcast)
(3) வலைப்பூக்கள் (Blogs)
(4) காட்சிப்பூக்கள் (Vlogs)
(5) X / ருவிட்டர் (Twitter)

**26.** ஆய்வொன்றுக்குத் தரவுகள் திரட்டப்படும்போது, முறைசார்ந்தும் திட்டமிட்டவாறும் அவற்றை விளக்குவதற்கு மிகவும் முக்கியமானதாக அமைவது எது?

(1) பகுப்பாய்வு ஆகும்.
(2) நேர்காணல் ஆகும்.
(3) ஆய்வு முறையியல் ஆகும்.
(4) முடிவுகளை முன்வைத்தல் ஆகும்.
(5) அட்டவணைகள், விளக்கப்படங்கள், வரையுருக்களைப் பயன்படுத்துதல் ஆகும்.

**27.** வெவ்வேறு பண்பாடுகளின் உளப்பாங்குகள் மற்றும் நடத்தைகள் பற்றிக் கற்பது

(1) பிரசித்த பண்பாட்டுக் கற்கைகள் என அழைக்கப்படும்.
(2) பண்பாட்டிடைக் கற்கைகள் என அழைக்கப்படும்.
(3) பூகோளப் பண்பாட்டுக் கற்கைகள் என அழைக்கப்படும்.
(4) வெகுசனப் பண்பாட்டுக் கற்கைகள் என அழைக்கப்படும்.
(5) பாரம்பரியப் பண்பாட்டுக் கற்கைகள் என அழைக்கப்படும்.

**28.** அரசாங்கப் பாடசாலையொன்றின் ஊடக தினத்திற்கான அனுசரணையை நூல் பதிப்பாளர் ஒருவர் வழங்கியிருந்தார். எந்த வகையான பொதுமக்கள் தொடர்பு இந்தச் சந்தர்ப்பத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது?

(1) அரச - பொதுமக்கள் தொடர்பு
(2) நிறுவன - பொதுமக்கள் தொடர்பு
(3) தொழில்சார் பொதுமக்கள் தொடர்பு
(4) வியாபார - பொதுமக்கள் தொடர்பு
(5) ஊடக - பொதுமக்கள் தொடர்பு

**29.** உள்ளுணர்வு என்பது

(1) கற்றுக்கொள்வதன் வழியாகப் பெற்றுக்கொள்ளப்படும் திறன் ஆகும்.
(2) அடுத்தவர்களின் அனுபவங்களோடு இணைந்ததாக விருத்தியடைதல் ஆகும்.
(3) பிறப்பினாலேயே கிடைக்கும் சக்தி என கீழைத்தேய அழகியல் இரசனையில் காணக் கிடைக்கின்றது.
(4) ஊடகம் மற்றும் ஊடகத் தொழில்நுட்பம் பற்றிய புரிதலாகும்.
(5) லியனார்டோ டாவின்சியினால் முன்வைக்கப்பட்ட படைப்பாக்கத்தின் ஓர் அடிப்படைக் காரணியாகும்.

[பக். 5 ஐப் பார்க்க

**30.** ஆய்வொன்றில் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படும்போது, இரண்டு எண்களுக்கிடையிலான இடைத்தொடர்பைக் காட்டுவதற்குப் பயன்படும் பதம் எது?
(1) ஆகாரம் (Mode)
(2) இடையம் (Median)
(3) இடை (Mean)
(4) சதவீதம் (Percentage)
(5) விகிதாசாரம் (Ratio)

**31.** பொதுமக்கள் தொடர்பிற்கும் விளம்பரப்படுத்தலுக்கும் இடையிலான பிரதான ஒத்ததன்மையானது
(1) முறைசாராத் தொடர்பாடலாகும்.
(2) முகாமைத்துவ இலக்காகும்.
(3) சந்தைப்படுத்தல் மாதிரியாகும்
(4) தூண்டற் செயன்முறையாகும்.
(5) ஆளிடை உறவாகும்.

**32.** விமர்சனரீதியான பெறுநர் ஒருவரின் பண்பொன்றாக **அமையாதது** எது?
(1) ஓர் உள்ளார்ந்த வலுவைக் கொண்டுள்ளமை
(2) தகவலின் மூலங்களைப் பரிசோதித்தல்
(3) செய்திகளை அவ்வாறே ஏற்றுக்கொள்வதில்லை
(4) ஊடக விளங்கறிவைக் கொண்டுள்ளமை
(5) ஊடகத் தோற்றமயக்கத்தைப் புரிந்துகொண்டுள்ளமை

**33.** முறையே கலை, இலக்கியம், இசைத் துறைகளுடன் தொடர்புடைய கலைஞர்களின் வரிசை
(1) டாவின்சி, பீத்தோவன், டோல்ஸ்டோய்
(2) டோல்ஸ்டோய், ஷேக்ஸ்பியர், பீத்தோவன்
(3) பீத்தோவன், டாவின்சி, ஷேக்ஸ்பியர்
(4) ஷேக்ஸ்பியர், டோல்ஸ்டோய், டாவின்சி
(5) டாவின்சி, ஷேக்ஸ்பியர், பீத்தோவன்

**34.** ஊடக நிறுவனமொன்றுக்குக் குறைகேள் அதிகாரி (ஒம்புட்ஸ்மன்) நியமிக்கப்படுவது
(1) கூட்டுத்தணிக்கையில் ஆகும்.
(2) நிறுவனரீதியான தணிக்கையில் ஆகும்.
(3) கட்டுப்பாட்டுத் தளர்வில் ஆகும்.
(4) சட்டரீதியான தணிக்கையில் ஆகும்.
(5) சுய தணிக்கையில் ஆகும்.

**35.** இலத்திரனியல் ஊடகம் வழியாகப் பெறுநருக்குத் தகவல் முன்வைக்கப்படும் செயன்முறை
(1) அடிப்படையில் ஒழுங்குபடுத்தலுக்கு உட்பட்டிருக்கும்.
(2) அடிப்படையில் படைப்பாக்கமாக அமைந்திருக்கும்.
(3) அடிப்படையில் ஆழமாக ஆய்வு செய்யப்பட்டிருக்கும்.
(4) அடிப்படையில் விமர்சனரீதியில் அமைந்திருக்கும்.
(5) அடிப்படையில் செலுத்துகைக்கு ஆட்பட்டிருக்கும்.

**36.** பெறுநர் ஒருவர் வெகுசன ஊடகச் செய்தியொன்றைக் கிரகித்துக்கொள்ள, ஏற்றுக்கொள்ள, நிராகரிக்க அல்லது நினைவில் நிறுத்திக்கொள்ள முடியுமாக இருப்பது
(1) ஒழுங்காக்கிகள் வழியே ஆகும்.
(2) வாயிற்காப்பாளர்கள் வழியே ஆகும்.
(3) வடிகட்டிகள் வழியே ஆகும்.
(4) பின்னூட்டம் வழியே ஆகும்.
(5) ஊடக விஸ்தீரணத்தின் வழியே ஆகும்.

**37.** 'வெளிப்பாட்டுச் சுதந்திரம்' என்ற எண்ணக்கரு முறைமைசார்ந்து முதலில் முன்வைக்கப்பட்டது
(1) மக் ப்ரைட் அறிக்கையில் ஆகும்.
(2) யுனெஸ்கோவினால் ஆகும்.
(3) சமஷ்டித் தொடர்பாடல் ஆணைக்குழுவினால் ஆகும்.
(4) சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் ஆகும்.
(5) அபிவிருத்திக்கான தொடர்பாடல் பற்றிய ரோம் ஒருமித்த கருத்தில் ஆகும்.

[பக். 6 ஐப் பார்க்க

**38.** விமர்சனத்திறனுள்ள ஒருவரை உருவாக்குவதற்கு அடிப்படையில் பங்களிப்புச் செய்வது
(1) ஆளுள் தொடர்பாடல் ஆகும்.
(2) ஆளிடைத் தொடர்பாடல் ஆகும்.
(3) குழுத் தொடர்பாடல் ஆகும்.
(4) பொதுசனத் தொடர்பாடல் ஆகும்.
(5) வெகுசனத் தொடர்பாடல் ஆகும்.

**39.** கமல், தொலைக்காட்சி செய்தி ஒளிபரப்பைப் பார்த்த பின்னர், தெரிவுசெய்யப்பட்ட தகவலொன்றைத் தான் பார்த்த மாதிரியே தனது பாடசாலை நண்பர்களுக்கு முன்வைத்தார். இந்தக் குறித்த தோற்றப்பாட்டை விபரிக்கும் தொடர்பாடல் வரைவிலக்கணம் பரிந்துரைக்கப்பட்டது
(1) வில்பர் ஷ்ராமினால் ஆகும்.
(2) ஹரோல்ட் டீ. லாஸ்வெல்லினால் ஆகும்.
(3) ஷெனொன் மற்றும் வீவரினால் ஆகும்.
(4) சார்ள்ஸ் எச். கூலியினால் ஆகும்.
(5) விமல் திஸநாயக்கவினால் ஆகும்.

**40.** பின்வரும் கூற்றுக்களைக் கவனத்திற்கொள்க.

*A* - ஆழமற்றது, எளிமையானது, எண்ணிக்கையில் அதிகமாகத் தயாரிக்கப்படுவது
*B* - உன்னதமான, புனிதமான குறியீட்டுத் தொகுதியின் அடிப்படையில் உருவாக்கம் பெறுவது
*C* - தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றுவது வழியாக சமூகமயமாதலுக்கு உதவுவது
*D* - மானுட சமூக வளர்ச்சியின் பேறாக இன்று படைப்பாக்கமொன்றாக நிலைத்திருப்பது
*E* - ஒழுக்கம் மற்றும் அறிவுசார் தகைமைகளை உள்ளடக்கி உயர்ந்து நிற்பது

முறையே, மேற்படி கூற்றுக்களை பிரதிநிதித்துவம் செய்யும் பண்பாட்டுக் கட்டமைப்புக்களைக் கொண்ட தேர்வைத் தெரிவுசெய்க.
(1) பிரசித்த, பாரம்பரிய, ஊடக, பூகோள, மரபார்ந்த பண்பாட்டுக் கட்டமைப்புக்கள்
(2) ஊடக, பிரசித்த, பாரம்பரிய, பூகோள, மரபார்ந்த பண்பாட்டுக் கட்டமைப்புக்கள்
(3) பூகோள, மரபார்ந்த, பிரசித்த, பாரம்பரிய, ஊடக பண்பாட்டுக் கட்டமைப்புக்கள்
(4) மரபார்ந்த, பிரசித்த, பாரம்பரிய, ஊடக, பூகோள பண்பாட்டுக் கட்டமைப்புக்கள்
(5) பாரம்பரிய, ஊடக, பூகோள, மரபார்ந்த, பிரசித்த பண்பாட்டுக் கட்டமைப்புக்கள்

**41.** பொதுமக்கள் தொடர்பு மிக முக்கியமானது எப்போதெனில்,
(1) பொருட்களையும் சேவைகளையும் வினைத்திறனுடன் முன்கொண்டு செல்வதற்கு ஆகும்.
(2) நிறுவனத்தின் கௌரவத்தைப் பாதிக்கும் செயற்பாடுகளைத் தணிப்பதற்கு ஆகும்.
(3) ஊடகத் தொடர்புகளைக் கட்டியெழுப்பி, தொழில்வாண்மையை விருத்தி செய்வதற்கு ஆகும்.
(4) திறமையான, அனுபவம் வாய்ந்த, செயற்றிறனுடனான தொழில்வாண்மையாளர்களை ஈர்ப்பதற்கு ஆகும்.
(5) பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், நல்லெண்ணத்தை வெல்வதற்கும், பிம்பத்தைப் பேணவும் ஆகும்.

**42.** ஊடக விளங்கறிவைப் பெற்றுக்கொள்ளும்போது, **குறைந்த** முக்கியத்துவம் வழங்கப்படுவது
(1) அழகியல்சார் தகவல்களுக்கு ஆகும்.
(2) இனம்சார் தகவல்களுக்கு ஆகும்.
(3) உணர்வுசார் தகவல்களுக்கு ஆகும்.
(4) நிலைநோக்குத் தகவல்களுக்கு ஆகும்.
(5) ஒழுக்கம்சார் தகவல்களுக்கு ஆகும்.

**43.** தகவல்பெறும் உரிமைச் சட்டத்தின் முதன்மை நோக்கமாக அமைவது
(1) அரசாங்க நிறுவனங்களிடம் இருக்கும் தகவல்களைப் பெறுவதற்கான மக்களின் உரிமையை உறுதிப்படுத்துவதாகும்.
(2) ஊடகங்களிடமிருந்தான தகவல்களை எவ்விதத் தடைகளுமின்றிப் பெறுவதற்கான மக்களின் உரிமையை உறுதிப்படுத்துவதாகும்.
(3) வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை மேலும் உறுதிப்படுத்தி, தகவல் பெறும் உரிமையை வலுவூட்டுவதாகும்.
(4) தேசிய பாதுகாப்புத் தொடர்பில் எழும் விடயங்களை ஒழுங்குப்படுத்தத் தேவையான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதாகும்.
(5) எந்தவொரு நிறுவனத்திலிருந்தும் எந்தவிதத் தடைகளுமின்றித் தகவல்கள் பெறப்படும் உரிமையை வலுப்படுத்துவதாகும்.

[பக். 7 ஐப் பார்க்க

**44.** ஒலி - காட்சி வழித் தயாரிப்பொன்றின் ஆரம்பத்தில், பின்னணித் தகவலைப் பார்வையாளருக்கு வழங்கப் பயன்படுத்தப்படும் எடுப்பு எது?
(1) இடைநிலை நீள் எடுப்பு
(2) உயர் கோணம் நீள் எடுப்பு
(3) கட்டியெழுப்பத் துணையாகும் எடுப்பு
(4) தாழ்கோணம் நீள் எடுப்பு
(5) இடைநிலை அண்மை எடுப்பு

**45.** தொடர்புபடும் விபரிப்புடன் சரியாகப் பொருந்தியிருக்கும் இரைச்சல் வகையினைத் தெரிவுசெய்க.
(1) சூழற்தடை - சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களால் ஏற்படுவது.
(2) ஊடகத்தடை - ஊடக உள்ளடக்கத்தால் ஏற்படுவது.
(3) தொழில்நுட்பத் தடை - ஆரம்ப காலகட்டப் பகுதிகளில் காணக் கிடைப்பது.
(4) கருத்துத் தடை - செய்தியைப் புரிந்துக்கொள்வதில் உள்ள சிரமத்தினால் ஏற்படுவது.
(5) உளவியற் தடை - புலனுணர்வினால் அதிகரிப்பதாகும்.

**46.** 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கப் புலமைச்சொத்துச் சட்டத்துடன் **தொடர்பற்ற** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) அறிவுசார் படைப்புக்களை அது பாதுகாக்கின்றது.
(2) பதிப்புரிமையானது பொருளாதாரம் மற்றும் ஒழுக்கம்சார் என இருவழிகளை உள்ளடக்கியிருக்கிறது.
(3) படைப்பாக்க மனித மனம் உருவாக்கும் அனைத்தையும் அது உள்ளடக்கியிருக்கிறது.
(4) பொருளாதார உரிமைகளின் மெய்யான உரிமையாண்மை, படைப்பாளியின் தன்மையில் தங்கியிருக்கிறது.
(5) விமர்சனம் அல்லது மதிப்பாய்வு மேற்கொள்ளப்படுவதற்கான நோக்கத்துடன் படைப்பாக்கம் குறிப்பிடப்படும்போது, பதிப்புரிமை மீறப்படுகின்றது.

**47.** பெண்ணியத் திறனாய்வுக்கு மாறானதாக அமைவது எதுவெனில்,
(1) பெண்கள் ஒரே மாதிரியாகச் சித்திரிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டுதல் ஆகும்.
(2) பெண்மையுடன் இணைந்த விழுமியங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு ஊடகப் பங்களிப்பை வழங்குதல் ஆகும்.
(3) பெண்கள் பாலியற் பொருட்களாகச் சித்திரிக்கப்படுவதை எதிர்த்தல் ஆகும்.
(4) ஊடகங்களில் பெண்களின் பிரச்சினைகள் திரிபடையச் செய்யப்படுவது தொடர்பில் கவனமாயிருத்தல் ஆகும்.
(5) பெண்களின் விழுமியங்கள் கவனத்திற்குட்படுவதை நிராகரித்தல் ஆகும்.

**48.** **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) விளம்பரப்படுத்தல் முகாமைத்துவ இலக்கொன்றாகச் செயற்படுகின்றது.
(2) நாட்டாரியல் சாதாரண மக்களின் அறிவு ஞானமாகும்.
(3) மக்களை மையப்படுத்திய பாதுகாப்பு என்பது தனியாளை மையப்படுத்திய பாதுகாப்பினை உள்ளடக்குகின்றது.
(4) தகவல் பெறும் உரிமையை முதலில் சட்டமாக இயற்றிய நாடு சுவீடன் ஆகும்.
(5) தகவல் பெறும் உரிமையை ஐக்கிய நாடுகள் சபை 1946 இல் தீர்மானமாக நிறைவேற்றியது.

**49.** பங்கேற்பு ஜனநாயகம் தொடர்பிலான பின்வரும் கூற்றுகளைக் கவனத்திற்கொள்க.

*A* - இலத்திரனியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, பிரஜைகளின் அரசியற் செயற்பாடுகளை அதிகரித்தல்

*B* - சமூகப் பங்களிப்பை அதிகப்படுத்துவதற்கு நிகழ்நிலை அரசியற் தளங்களைப் பயன்படுத்த முடியுமாயிருத்தல்

மேலுள்ள தெரிவுகளில்
(1) *A* மாத்திரம் சரியானது.
(2) *B* மாத்திரம் சரியானது.
(3) *A* மற்றும் *B* தவறானவை.
(4) *A*, *B* யை உறுதிப்படுத்துகின்றது.
(5) *B*, *A* யை உறுதிப்படுத்துகின்றது.

[பக். 8 ஐப் பார்க்க

**50.** தனியார் மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் முதலுதவியைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக உயிரிழந்ததாக ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன. பின்வருவன இது தொடர்பில் மருத்துவமனை நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்ட பல செயற்பாடுகளாகும்.

*A* - வெகுசன ஊடகங்களால் கேட்கப்பட்ட தகவல்களுக்கு தொலைபேசி வழியாக துரிதமாகப் பதிலளித்தல்

*B* - ஊடக அறிக்கையொன்று வெளியிடப்படுதல்

*C* - ஊடகவியலாளர் மாநாடொன்றில் அறிக்கையொன்றை வெளியிடுதல்

*D* - 'நலத்திற்கான ஆதரவு' என்னும் பெயரில் ஒரு நாள் இலவச சுகாதார முகாம் ஒன்றை ஏற்பாடு செய்தல்.

முறையே, இந்த மேற்படி பணி இலக்குகளுக்காக நியமிக்கப்படக்கூடிய அதிகாரிகளைக் கொண்ட சரியான தெரிவைத் தேர்வுசெய்க.

(1) ஊடக அதிகாரி, பொதுமக்கள் தொடர்பு அதிகாரி, நிகழ்வு முகாமையாளர், ஊடகப் பேச்சாளர்
(2) பொதுமக்கள் தொடர்பு அதிகாரி, ஊடக அதிகாரி, ஊடகப் பேச்சாளர், நிகழ்வு முகாமையாளர்
(3) ஊடகப் பேச்சாளர், பொதுமக்கள் தொடர்பு அதிகாரி, ஊடக அதிகாரி, நிகழ்வு முகாமையாளர்
(4) ஊடக அதிகாரி, பொதுமக்கள் தொடர்பு அதிகாரி, ஊடகப் பேச்சாளர், நிகழ்வு முகாமையாளர்
(5) நிகழ்வு முகாமையாளர், ஊடக அதிகாரி, ஊடகப் பேச்சாளர், பொதுமக்கள் தொடர்பு அதிகாரி

❊ ❊ ❊

 05814

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය II
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் II
Communication & Media Studies II

29 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ **ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுதுக. ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **40** புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** (i) எந்த இலங்கைப் பல்கலைக்கழகம் வெகுசனத் தொடர்பாடல் துறையொன்றை முதலில் ஆரம்பித்தது? (04 புள்ளிகள்)

(ii) தொடர்பாடலும் ஊடகக் கற்கைகளும் பாடத்தைக் கற்கும் அவசியம் தொடர்பான **நான்கு** அம்சங்களை எடுத்துகூறுக. (08 புள்ளிகள்)

(iii) தொடர்பாடலின் முக்கிய பணிகள் **மூன்றினைச்** சுருக்கமாக விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) ஆளிடைத் தொடர்பாடலுக்கும் வெகுசனத் தொடர்பாடலுக்கும் இடையிலான வேறுபாடுகளைப் பின்வரும் முக்கிய காரணிகள் தொடர்பில் ஒப்பிட்டு விளக்குக.

(அ) தொடர்பாடுநர்

(ஆ) பெறுநர்

(இ) இரைச்சல்

(ஈ) பின்னூட்டம் (16 புள்ளிகள்)

**2.** (i) இலங்கையின் தேசிய இணையப் பாதுகாப்பு நிறுவனத்தைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) ஊடக - பொதுமக்கள் தொடர்பில் பயன்படுத்தப்படும் **இரண்டு** தந்திரோபாயங்களைச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) மொழியைப் படைப்பாக்கத்துடன் பயன்படுத்தும் முக்கியத்துவத்தைப் பின்வரும் ஊடகங்கள் தொடர்பில் விளக்குக.

(அ) செய்திப்பத்திரிகைகள்

(ஆ) சினிமா (12 புள்ளிகள்)

(iv) ஊடக வளர்ச்சியுடன் இணைந்ததாக வேறுபட்ட போக்குகள் வளர்ச்சிபெறுகின்றன. அவ்வாறான இரண்டு போக்குகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை உதாரணங்களுடன் தனித்தனியே விளக்குக.

(அ) கட்டுப்பாட்டுத் தளர்வு

(ஆ) வணிகமயப்படுத்தல் (16 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



**3.** தொடர்பாடல் ஓர் சமூக வகிபங்கையாற்றுகின்றது.

(i) "ஊடகமே செய்தியாகிறது" என்ற சிந்தனையை எடுத்துரைத்தவர் யார்? (04 புள்ளிகள்)

(ii) பாரம்பரியத் தொடர்பாடலின் தனித்துவமான பண்புகள் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

(iii) தொடர்பாடலின் இயல்பை அடையாளப்படுத்திக்கொள்வதற்கு உதவும் **மூன்று** பண்புகள் பின்வருவனவாகும். அவற்றைத் தனித்தனியே சுருக்கமாக விபரிக்குக.
(அ) தொடர்பாடல் ஓர் செயன்முறையாகும்.
(ஆ) தொடர்பாடல் குறியீட்டுத்தன்மையானது.
(இ) தொடர்பாடல் குறிக்கோளைக் கொண்டது. (12 புள்ளிகள்)

(iv) தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தொடர்பில் பின்வரும் அம்சங்கள் **இரண்டினை** விளக்குக.
(அ) பிரசித்த பண்பாட்டின் இயல்புகள்
(ஆ) பூகோளப் பண்பாட்டின் இயல்புகள் (16 புள்ளிகள்)

**4.** இணையத்தில் உலாவிக் கொண்டிருந்தபோது, ரவிஹரி 'புதிய ஊடகம் வழியாக புதிய உலகமொன்றிற்குள் காலடிவைத்தல்' என்ற தலைப்பிலான கட்டுரையொன்றைக் கண்ணுற்றார்.

(i) உலகம் முழுவதுமான இணையம் (WWW) என்ற சிந்தனையை எவர் முதலில் அறிமுகப்படுத்தினார்? (04 புள்ளிகள்)

(ii) நிகழ்நிலைத் தொடர்பாடலின் இயல்புகள் **இரண்டினைச்** சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) சமூக ஊடகங்களின் நேர்மறையான விளைவுகள் **மூன்றினை** விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) புதிய ஊடகத்தின் இயல்புகள் **நான்கினை** உதாரணங்களுடன் கலந்துரையாடுக. (16 புள்ளிகள்)

**5.** (i) மானுடக் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளில் 'பண்பாடு' (culture) என்ற பதத்தை முதலில் பயன்படுத்திய விஞ்ஞானியைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) முரண்பாடுகளைத் தீர்ப்பதில் வெற்றிகரமான கலந்துரையாடல் ஒன்றின் முக்கியத்துவத்தை **இரண்டு** அம்சங்களைப் பயன்படுத்திச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) ஆய்வொன்றுக்கு மாதிரியொன்றைத் தெரிவுசெய்யும்போது அவசியம் கவனத்திற்கொள்ள வேண்டிய அம்சங்கள் **மூன்றினை** விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) பின்வரும் இரண்டு வகையான ஒழுங்குபடுத்தல்களைத் தனித்தனியே விளக்கி, அவற்றின் தலா **இரண்டு** விசேட பண்புகளை உதாரணங்களுடன் தருக.
(அ) சுய தணிக்கை
(ஆ) நிறுவனரீதியான தணிக்கை (16 புள்ளிகள்)

**6.** வெகுசன ஊடகங்கள் முன்வைக்கும் செய்திகள் தொடர்பான பெறுநர்களின் நம்பகத்தன்மையை மதிப்பீடு செய்யும் ஆய்வொன்றில், தரவுகளைத் திரட்டும் பணியில் நீங்கள் பங்கேற்றிருப்பதாக எண்ணிக்கொள்க.

(i) ஒருங்கிணைத்துக் கட்டப்பட்டதும் வெவ்வேறு தகவல்களை உள்ளடக்கியதுமான அச்சு வெளியீடு எது? (04 புள்ளிகள்)

(ii) செய்திப்பத்திரிகை ஊடகத்தின் இயல்புகள் **இரண்டினைச்** சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) அளவாய்வு முறை பயன்படுத்தப்படும்போது எதிர்கொள்ளப்படும் பிரதிகூலங்கள் **மூன்றினை** விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) ஊடகச் செய்தியொன்றை ஆய்வு செய்வதற்குப் பயன்படும் பின்வரும் அம்சங்களை விளக்குக.
(அ) அர்த்தம்
(ஆ) தூண்டல்
(இ) பக்கச்சார்பு
(ஈ) திரிபுபடுத்தல் (16 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

0000473

PAST PAPERS WIKI
අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

7. பாடசாலையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக மாணவர்கள் தாமாகவே நிதிதிரட்டும் வகையில், நாடகமொன்றை அரங்கேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டது.

(i) சைகைகள், தோற்றங்கள் மற்றும் முகபாவனைகளை உள்ளடக்கிய தொடர்பாடல் வடிவம் எது? (04 புள்ளிகள்)

(ii) அபிவிருத்திச் செயன்முறையில் உள்ளூர்மயமாக்கலின் முக்கியத்துவத்தை **இரண்டு** அம்சங்களைப் பயன்படுத்திச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) படைப்பாளி ஒருவர் அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள் **மூன்றினை** விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) நாடகமொன்றை அரங்கேற்றும் பணியில் நீங்கள் ஓர் நிகழ்வு முகாமையாளராகப் பணியாற்றுவீர்களாயின், உங்களது வகிபங்குடன் தொடர்புடைய பொறுப்புக்கள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library